DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.127/2022

**prosecution witness: LW-3 as PW-3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சரோஜினி | தொழில் | : வீட்டுக்குடித்தனம் |
| க/பெ. | : நாகேஸ்வரன் | வயது | : 67 |
| ஊர் | : இராமேஸ்வரம் | சமயம் | : இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>18.11.2025</u>

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை)

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் தற்போது இராமேஸ்வரம் விட்டில்பிள்ளை குறுக்குத்தெருவில் குடியிருந்து வருகிறேன். எனக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளனர். மூத்த மகளின் பெயர் பாக்கியலெட்சுமி, மற்றொரு மகளின் பெயர் சித்திரகலா. ஆஜர் எதிரியின் பெயர் பிரவீன் குமார். அவர் எனது மகளான சித்திரகலா என்பவரை விரும்பி திருமணம் செய்து கொண்டார். ஆஜர் எதிரி சுமதி என்ற பெண்மணியுடன் பழக்கம் உண்டாகி எனது மகள் சித்திரகலா என்பவரை கொன்றால்தான் வாழ முடியும் என்று கூறியுள்ளார். 27.07.2020ம் தேதி முதல் சித்திரகலா பிரவீன்குமாருடன் சண்டையிட்டு என்னிடம் குடியிருந்து வந்தார்.

2. கடந்த 15.05.2021ம் தேதியன்று மதியம் 1.00 மணியளவில் பிரவீன்குமார் மற்றும் சித்திரகலா குடியிருந்த ஈஸ்வரியம்மன் கோவில் அருகே உள்ள வீட்டிற்கு நான், சித்திரகலா, பாக்கியலெட்சுமி ஆகியோர்கள் துணிமணியை எடுப்பதற்காக சென்றிருந்தோம். நாங்கள் வீட்டின் காம்பவுண்ட் அருகே செல்லும் போது பிரவீன்குமார் ஒரு செங்கல் கல்லை எடுத்து சித்திரகலாவின் முதுகிலும், காலிலும் அடித்தார். சித்திரகலாவின் 3 வயது குழந்தையை நான் கையில் வைத்திருந்தேன். சித்திகலா மற்றும் பாக்கியலெட்சுமி மருத்துவமனைக்கு சென்றார்கள். அங்கு அவர்களை போலீசில் புகார் கொடுக்க சொன்னார்கள். அவர்கள் புகார் கொடுத்தார்கள். என் பிள்ளையை பிரவீன்குமார் டார்ச்சர் செய்து விட்டார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.11.18 15:09:32 +0530